**தலைப்பு 405 – அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள் மற்றும் இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள் மற்றும் இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள் மற்றும் இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 யூன் 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான

வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்றும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

மீளாய்வாண்டில், அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் 3 அரச நிறுவனங்களுக்காக ரூபா 1,395,222,000 மீண்டுவரும் செலவினமும், ரூபா 310,280,000 மூலதனச் செலவினமும் என மொத்தம் ரூபா 1,705,502,000 செலவிடப்பட்டிருந்தது. மூன்று அரச நிறுவனங்களின் இந்த செலவுகள் தொடர்பான தகவல்களை இராஜாங்க அமைச்சு சமர்ப்பித்திருக்காமையால், பின்வரும் செலவுகள் அந்தந்த பணிகளுக்கு செலவிடப்பட்டதா என்பதை பரிசோதிக்க முடிந்திருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நாரா நிறுவனத்தின் ஏனைய செயற்பாட்டுச் செலவின விடயத்தின் கீழ் X-Press Pearl கப்பல் தீப்பற்றியமை தொடர்பில் ஏற்பட்ட தாக்கங்களை மதிப்பிடுவதற்கான ஆய்வு நடவடிக்கைகளிற்காக ரூபா 50,000,000 மேலதிக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தமையால் திருத்திய மதிப்பீடு ரூபா 93,600,000 வரை அதிகரித்திருந்தது. ஆண்டின் இறுதியில் அதில் ரூபா 77,155,000 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும், ஆய்வு நடவடிக்கைகளின் செயலாற்றுகை தொடர்பான விபரங்கள் இராஜாங்க அமைச்சினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | X-Press Pearl கப்பல் தீப்பற்றியமை தொடர் பில் ஏற்பட்ட தாக்கங்க ளை மதிப்பிடுவதற்கான ஆய்வு நடவடிக்கைகள் குறித்த விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | செலவிடப்பட்ட தொகைக்குரிய ஆய்வு நடவடிக் கைகளின் செய லாற்றுகை தொட ர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படு தல் வேண்டும். |
| (ஆ) | நாரா நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளிற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 110,000,000 தொகை சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் எவை என்பது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நாரா நிறுவனத்தில் இடம்பெற்ற ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை காட் டுகின்ற அறிக்கை யொன்று சமர்ப்பிக்கப்ப ட்டது. | செலவிடப்பட்ட தொகைக்காக மேற்கொள்ளப்ப ட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிரு த்தி செயற்பாடு கள் எவை என்பது தொடர் பான தகவல்கள் |

| | | |
|---|---|---|
| | | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) இராஜாங்க அமைச்சின் பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக தேசிய நீரியல் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA) இற்கு ஒப்படைக்கப்பட்ட 05 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களிற்காக மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்த ரூபா 1,283,256,961 தொகை தொடர்பிலான கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததுடன், அந்த நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த மாதாந்த பொழிப்பு விபரங்களைக் கொண்டு மாத்திரம் பேரேட்டுக் கணக்கு பேணப்பட்டிருந்தது. | தேவைப்படுகையில் கணக்காய்விற்காக அமைச்சுக்கு சமர்ப்பிப்பதற்கு அல்லது அதிகாரசபைக்கு வருகைதந்து தேவையான கோவைகளை பரிசீலிக்க சந்தர்ப்பம் வழங்க முடியும். | செயற்திட்டங்களிற்காக செலவிடப்பட்ட நிதி குறித்த பணிகளிற்கு பயன்படுத்தப்பட்டமை தொடர்பான தகவல்களைப் பெற்று பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

---

**2.1 கட்டுநிதி முகாமைத்துவம்**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரிக்குத் தீர்க்கப்பட வேண்டிய கட்டுநிதி மீதி இராஜாங்க அமைச்சின் காசுப் புத்தகத்தின் படி ரூபா **12,450,550** ஆன போதிலும், அத்தொகையை தீர்க்காது அதில் ரூபா 550 தொகை மாத்திரம் தீர்க்கப்பட்டு எஞ்சிய தொகையான ரூபா **12,450,000** ஐ இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு சில்லறைக் காசாக வழங்குவதற்கு 103 ஆம் இலக்க கொடுப்பனவு உறுதிச்சீட்டு தயாரிக்கப்பட்டிருந்தது. மேலும், இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு அத்தொகையை செலுத்தாது 28 நாட்களிற்குப் பின்னர் அதாவது 2022 சனவரி 28 ஆந் திகதி மீண்டுத் திறைசேரிக்கு மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், அத்தொகை மீளாய்வாண்டின் **405-2-3-77-2506** ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழான செலவொன்றாக பதியப்பட்டிருந்தது. | கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் அதற்கான மூல ஆவணங்கள் வழங்கப்படாமையால் அத்தொகை திறைசேரிக்கு மீளளிக்கப்பட்டது. | ஆண்டின் இறுதியில் காணப்படும் காசு மீதிகளுக்கு காசோலைகளை வழங்காது திறைசேரிக்கு அவை அனுப்பப்படுதல் வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நாரா நிறுவனத்திற்கு 405-2-4-2-2507 ஆம் இலக்க ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 250,000,000 தொகையில் நிதிப்பிரமாணம் 66 மாற்றல்களின் கீழ் ரூபா 60,000,000 தொகை மாற்றப்பட்டிருந்தமையால் திருத்திய மதிப்பீடு ரூபா 190,000,000 ஆகக் காணப்பட்டது. அத்தொகையிலிருந்து 42 சதவீதத்திற்குச் சமமான ரூபா 80,000,000 தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளிற்காக களப் பரிசோதனைகளில் ஈடுபட முடியாது போயிந்தமையால் குறித்த நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல் குறைவடைந்திருந்ததுடன் நிலவிய அந்நியச் செலாவணி பிரச்சினை காரணமாக குறித்த இரசாயனப் பொருட் களின் வழங்கலின் தட்டுப்பாட்டிற்கு மெருமளவில் தாக்கம் செலுத்தியது. | ஆராய்ச்சி நடவடிக்கைகளிற்காக ஒதுக்கப்பட்ட நிதிகள் அதற்காக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாண மாற்றல்களின் கீழ் மொத்தம் ரூபா 120,000,000 தொகை மாற்றப்பட்டு நாரா நிறுவனத்தின் மூலதனச் சொத்துக்களின் புனரமைப்புக்காக ரூபா 30,000,000 தொகையும் மூலதனச் சொத்துக்களின் கையேற்புக்காக ரூபா 105,000,000 தொகையும் விஞ்ஞான கூடத்தை நவீனமயப்படுத்துவதற்காக ரூபா 60,000,000 தொகையும் என்ற வகையில் மொத்தமாக ரூபா 195,000,000 ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 65,500,000 தொகை மாத்திரமே செலவிடப்பட்டிருந்தமையால் மொத்த நிதி ஏற்பாட்டில் 66 சதவீதத்திற்குச் சமமான ரூபா 129,500,000 எஞ்சியிருந்ததன் காரணமாக நிதிப்பிரமாணத்தின் கீழ் மாற்றப்பட்டிருந்த மொத்தத் தொகையும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தால் மூலதனச் செலவினத்திற்காக விதிக்கப்பட்ட வரையறைகள் மற்றும் 2022 ஆம் ஆண்டில் குறித்த பணிகளிற்கான செலவுகளை தீர்ப்பதில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக மானியத்தை அங்கீகரிக்காதிருப்பதற்கு இராஜாங்க அமைச்சின் செயலாளர் தீர்மானித்திருந்ததுடன் சிலாபம் மீன்பிடி துறைமுகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி (Green Harbour Development) – இரண்டாம் கட்டச் செயற்திட்டம் அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானம் காரணமாக இடைநிறுத்தப்பட்டது. | மதிப்பீடுகள் தர்க்க ரீதியானவையாக காணப்படுதல் வேண்டும். |
| மேலும், செலவிடப்பட்டிருந்த ரூபா 65,500,000 தொகை பற்றிய தகவல்கள் இராஜாங்க அமைச்சு பெற்றுக் கொண்டிருக்காமையால் கணக்காய்வில் அதனை பரிசோதிக்க முடிந்திருக்கவில்லை. | அமைச்சில் அறியத்தருதல்கள் இடம்பெறுவதில்லை என்பதுடன் குறித்த செயல் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்படுகின்ற செயல் முன்னேற்ற அறிக்கைகளில் இதனுடன் சம்பந்தப்பட்ட பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்கள் அறிவிக்கப்படுகின்றன. | |

## 2.3 வரம்புகளை மீறுதல்

அரசாங்க முற்பண நடவடிக்கைகளிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த வரம்புகள் மீறப்படுதல் மற்றும் அவை அடையப்படாமை தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்பு கீழே தரப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான இராஜாங்க அமைச்சின் 40501 ஆம் இலக்க தலைப்பிற்குரிய அரசாங்க உத்தியோகத்தர் முற்பணங்கள் "பீ" கணக்கு நடவடிக்கைகளிற்கான ஆகக் கூடிய செலவின எல்லை, ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை மற்றும் ஆகக்கூடிய வரவு மீதிகளின் எல்லை ஆகியவற்றை முறையே ரூபா 2,500,000 ரூபா 300,000 மற்றும் ரூபா 3,200,000 என மாற்றம் செய்வதற்காக தேசிய பாதீட்டுத் திணைக்களத்தினால் நிதி அமைச்சருக்கு பரிந்துரைப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அந்த எல்லைகள் அங்கீகரிக்கப்பட்மைக்கான தகவல்கள் இராஜாங்க அமைச்சினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கணக்காய் விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் ACA-5 படிவத்தில் அந்த மாற்றியமைத்த எல்லைகளை காண்பிப்பதற்குப் பதிலாக ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளான முறையே ரூபா 3,000,000 ரூபா 750,000 மற்றும் ரூபா 5,000,000 என்பன காட்டப்பட்டிருந்தமையால் ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை அடையப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரம் தொடர்பில் திறைசேரியினால் இரா ஜாங்க அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருக்காத துடன் திறைசேரியினால் அது பாராளுமன்றத்து க்குச் சமர்ப்பிக்கப்பட்ட தாக வாய் மொழிமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. திருத்தியமைத்த எல்லை கள் தவறுதலாக கணக் குகளில் குறிப்பிடப்படாது ள்ளதுடன் ஆகக் குறைந்த பெறுவனவு எல்லையான ரூபா 300,000 எல்லை அடையப்பட்டுள்ளது. | மாற்றியமைத்த எல்லைகள் தொடர் பான தகவல்கள் இராஜாங்க அமைச் சினால் திறைசேரியி டமிருந்து பெறப்ப ட்டு கணக்காய் விற்குச் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும். |

## 2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் படி இராஜாங்க அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டெ டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்லப்படு வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன், | உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட் டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையில் மாற்றங்கள் செய்யப்படவி ல்லை. | சட்டத்திலுள்ள ஏற்பா டுகளின் பிரகாரம் செயற்படுதல் வேண் டும். |

அம்மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இராஜாங்க அமைச்சின் 2021 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டின் மூலம் 8 விசேட பணிகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதற்கு அமைவாக தயாரிக்கப்பட்டிருந்த செயல் முன்னேற்ற அறிக்கைகளின் படி குளங்கள், களப்புகள் மற்றும் அகழ்வு நிலங்களில் நன்னீர் மீன் வளர்ப்பை பிரபல்ய ப்படுத்துவதற்குத் தேவையான உத்திகளைத் தயாரித்தல் மற்றும் பாரியள விலான செயற்பாடு களை வினைத்திறனாக மேற்கொள்வதற்காக மீன்பிடித் துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்படுதலைத் தவிர்த்து பின்வரும் ஏனைய பணிகள் தொடர்பில் கவனம் செலுத்தி திட்டமிடப்பட்டு அத்திட்டங்கள் நடைமுறைப்படுத் தப்பட்டிருக்கவில்லை. | | |
| (அ) ஏற்றுமதிச் சந்தையை இலக்காகக் கொண்ட அலங்கார மீன் கைத்தொழிலை உருவாக்குவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல். | இதன் கீழ் இரண்டு பிரதான நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. | செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதற்கு அமைவாக தயாரிக்கப் பட்டிருந்த செயல் முன்னேற்ற அறிக்கைகளின் படி செயல் முன்னேற்றம் அறிவிக்கப் படுதல் வேண்டும். |
| (ஆ) பல்நாள் மீன்பிடி படகுகளிற்காக கடல் நீரைப் பயன்படுத்தி குளிரூட்டல் முறைமை இனை அபிவிருத்தி செய்தல் மற்றும் சூரிய வலு பயன்படுத்தப்படுவதனை ஊக்குவித்தல். | இதன் கீழ் இரண்டு பிரதான செயற்பாடுகள் திட்மிடப்பட்டு நடாத்தி வரப்படுகின்றன. | -மேற்படி- |
| (இ) நவீன தொடர்பாடல் வசதிகள், குளிரூட்டல், எரிபொருள் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் கொண்டதாக மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் நங்கூரமிடும் தளங்களை மேம்படுத்தல். | இதன் கீழ் மூன்று நிகழ்ச்சித்திட்டங்கள் திட்மிடப்பட்டு நடாத்தி வரப்படுகின்றன. | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| (ஈ) கடல் மற்றும் நன்னீர் மீன் இனங்களை பெருமளவு இனவிருத்தி செய்வதற்காக மீன்பிடித் தொழிலாளர் சங்கங்கள் மற்றும் தேசிய நீரியல் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றுடன் இணைந்து நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தல். | 2021 ஆம் ஆண்டில் மொத்த உற்பத்தியான 111.59 மில்லியன் மீன் இனங்களில், 17.45 மில்லியன் (15.63%) சமூகம் சார்ந்த மீன் முட்டை உற்பத்தி அலகுகளால் உற்பத்தி செய்யப்பட்டதுடன் 25.24 மில்லியன் (22.61%) நீர்த்தேக்கங்க ளிலுள்ள கூண்டுகள் மற்றும் கொட்டில்கள் மூலம் மீன்பிடி சங்கங்க ளினால் உற்பத்தி செய்யப்பட்டது. | -மேற்படி- |
| (உ) சுற்றாடலுக்கு தீங்கற்ற நவீன உயர் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | அதிக மீன் வளத்தை முன்கூட்டியே கணித்து மீன்பிடி உற்பத்தித் திறனை மேம்படுத்த தொழில்நுட்ப உதவி கோரி உலக உணவு நிறுவனத்திடம் அந்த திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | -மேற்படி- |
| (ஊ) மீனவர்கள் மற்றும் அதனைச் சாந்த தொழிலில் ஈடுபட்டுள்ளோரிற்கு தொழில் பயிற்சியளித்து அவர்களது அறிவை விருத்தி செய்தல். | கடற்றொழில் திணைக் களம், நீரியல் வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தொழில் பயிற்சி அதிகாரசபை ஆகியவற்றால் பயிற்சி கள் நடாத்தப்படுகி ன்றன. | -மேற்படி- |

**3.2 பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்காமை**

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் சிவில் பொறியியல் வேலைகள் மற்றும் இயந்திரப் பொறியியல் வேலைகளை மேற்கொள்வ தற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 250,000,000 மூலதன நிதியத்திலிருந்து ரூபா 194,613,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், செயல் முன்னேற்ற அறிக்கையின் படியான செலவினம் | 2021 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட மூலதன நிதி ஏற்பாடு ரூபா 250,000,000 ஆன போதிலும், அந்த ஆண்டில் நிறுவனத்திற்குக் கிடைத்த மொத்தத் தொகையான ரூபா 194,613,000.00 செலவிடப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதற்கு அமைவாக தயாரிக்கப் பட்டிருந்த செயல் முன்னேற்ற அறிக்கைக ளின் படி செயல் முன்னேற்றம் அறிவிக்கப் படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 287,260,000 ஆகும். மேலும், இயந்திரப் பொறியியல் வேலைகளின் கீழ் ''சயுரு'' கப்பலை திருத்துவதற்காக ரூபா 23,000,000 இற்கு திட்டமிடப்பட்டிருந்த வேலைகளிற்கான ரூபா 14,640,000 செலவினம் கேள்வி கோரலுக்காக மாத்திரம் ஆனமையால் அந்த திருத்தங்கள் தொடர்பில் பௌதீக செயல் முன்னேற்றம் காணப்படவில்லை. | | |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் சுதுவெல்ல மீன்பிடி துறைமுகத்தின் அபிவிருத்திக்காக ஆரம்ப செலவின மதிப்பீட்டின் மூலம் ரூபா 150,000,000 ஒதுக்கப்பட்டு நிதிப்பிரமாணம் 66 மாற்றல்களின் பின்னர் எஞ்சியிருந்த தொகை ரூபா 73,000,000 ஆன போதிலும், மொத்தத் தொகையும் பயன்படுத்தப்படாததுடன் அந்தப் பணியை மேற்கொள்ளல் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | சுதுவெல்ல மீன்பிடி துறைமுகத்தை அண்மித்ததாக பாரிய மீன்பிடி துறைமுகமான கந்தர துறைமுகத்தின் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டமையால் இங்கு மீன்பிடி துறைமுகமொன்றை அமைக்க வேண்டிய அவசரத் தேவை காணப்படாமையால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காதிருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், பிரதேசத்தின் அரசியல் பிரமுகர்களும் சுதுவெல்ல மீனவர்களும் இந்தத் தீர்மானத்துடன் இணங்கியமையால் அதற்கு எதிர்ப்பு ஏற்படவில்லை. | மீன்பிடி துறைமுகங்களை அமைப்பதற்கு முன்னர் உரிய சாத்தியவள ஆய்வை மேற்கொண்டு திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | தொடந்தூவ மீன்பிடி துறைமுகத்தின் அபிவிருத்திக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 100,000,000 தொகையிலிருந்து ரூபா 25,000,000 தொகைக்குரிய பணிகள் மாத்திரம் இலக்கிடப்பட்டு ரூபா 7,625,468 பணிகளுக்கு மாத்திரம் செலவிடப்பட்டிருந்தமையால் குறித்த பணிகளின் பௌதீக செயல் முன்னேற்றம் குறைந்த அளவில் காணப்பட்டது. | அமைச்சினால் திட்டமிடப்பட்டவாறு நிர்மாண வேலைகளை ஆரம்பித்தல் 2021 ஆம் ஆண்டின் இறுதிக் காலத்தில் இடம்பெற வேண்டிய போதிலும், அவ்வாறு திட்டமிடப்பட்டவாறு பணிகளை மேற்கொள்ள முடிந்திருக்கவில்லை. | திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டப் பணிகளை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அம்பாந்தோட்டை மீன்பிடி துறைமுக அபிவிருத்திக்காக 2021 ஆம் ஆண்டில் ரூபா 20,000,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 9,000,000 இற்கான பணிகள் மாத்திரம் திட்டமிடப்பட்டு ரூபா 1,054,749 செலவிடப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் இந்த நிதி ஏற்பாட்டை பயன்படுத்த முடியாது போயிருந்தது. | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| (உ) இறங்குதுறைகள் மற்றும் 8 நங்கூரமிடல் தளங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 18,000,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆரம்பச் செலவினத்திற்காக ரூபா 1,900,000 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தமையால் நிதிசார் செயல் முன்னேற்றம் 11 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது. | நிலவிய கொவிட் நோய்த் தொற்று காரணமாக தொட ர்புடைய தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ள முடியாதிருந் தமையால் நிர்மாண வேலைகளை ஆரம்பிக்க முடியாது போனதுடன் துறைமுகங்களிற்கு அண்மித்த பகுதிகளில் புவியியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக குறித்த தொகை செலவிடப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 3.3 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை பூரணப்படுத் துவதற்காக இராஜாங்க அமைச்சினால் போதிய கால அவகாசத்துடன் குறைநிரப்பு நிதி ஏற்பாடு கோரப்படாமையால் 2021 திசெம்பர் 22 ஆந் திகதி இராஜாங்க அமைச்சிற்குக் கிடைத்திருந்த ரூபா 40,350,000 குறைநிரப்பு நிதி ஏற்பாட்டிற்காக மேலும் 07 நாட்கள் தாமதிக்கப்பட்டு அதாவது 2021 திசெம்பர் 29 ஆந் திகதி திறைசேரியிடமிருந்து கட்டுநிதி கோரப்பட் டிருந்தது. 2021 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 40,000,000 கட்டுநிதி கிடைத்திருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் போதியளவு காலம் காணப்படாமையால் குறைநிரப்பு நிதி ஏற்பாட்டை பயன்படுத்த முடியாது போயிருந்ததுடன், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியன்று அந்த கட்டுநிதியில் ரூபா 27,550,000 இராஜாங்க அமைச்சினால் தேசிய நீரியல் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு (NAQDA) அதன் அபிவிருத்திப் பணிகளிற்கு செலவிடுவதற்காக விடுவிக்கப்பட்டிருந்தமை அவதானிக் கப்பட்டது. இதன்படி, அந்தத் தொகை யின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேறியிருக்காமை உறுதிப்படுத்தப்ப ட்டது. | இந்த நிதி ஏற்பாடு 2021.12.27 ஆந் திகதிய ன்றே இராஜாங்க அமைச்சி ற்கு கிடைத்திருந்ததுடன், அது கணக்குகள் பிரிவிற்கு 2021.12.28 அன்றே கிடைத்தி ருந்தது. உறுதிச்சீட்டுக்கள் கிடைத்திருந்த பெறுமதிக் கேற்ப நிதியினை உச்சளவு பயனுள்ள விதத்தில் பயன்ப டுத்துவதற்கு முயற்சி எடுக் கப்பட்டதுடன், கடற்றொழில் கூட்டுத்தாபனத்திடம் மூல ஆவணங்கள் காணப்படா ததன் காரணமாகவே குறைநிரப்பு நிதி ஏற்பாட்டை பயன்படுத்த முடியாது போயிருந்தது. | போதிய கால அவகாச த்துடன் குறைநிரப்பு நிதி ஏற்பாட்டை கோருவத ற்கும், செயற்திட்டங்க ளிற்கு செலவிடப்பட்ட நிதிகள் குறித்த பணக ளிற்கு செலவிடப்பட்டு ள்ளமை சம்பந்தமான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கும் பின்தொ டர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |